www.samugasinthanai.in

# கண்ணகி – கோவலன் முதலிரவு காட்சிகளும், இன்றைய சமூக சூழலில் கண்ணகி– சிலப்பதிகார காப்பியத் தலைவியின் பெருமைகளும்.

**கண்ணகி கோவலன் முதலிரவுக் காட்சிகள்**

குவளை மலர்போன்ற கண்களைக் கொண்ட கண்ணகியும், அவளுடைய கணவன் கோவலனும் எழுநிலை மாடமொன்றின், இடைநிலையான நான்காம் மாடத்தில், வண்டுகள் சுவைக்கும் வாசனைப் பூம்படுக்கையின் மேல் சென்று அமர்ந்தனர். கண்ணகியின் அழகை பல பொருள்களுடன் கோவலன் ஒப்பிடுகிறான். ஆராத காதலுடன், தன் மனைவியின் முகத்தை கோவலன் நோக்கினான். முன்னர் எண்ணாதனவெல்லாம் எண்ணி, அவன் நலனை பெரிதும் பாராட்ட தொடங்கினான். பெரிய தோகை உடையதும், நீல நிறம் கொண்டதுமான மயில், நின் அழகிய சாயலுக்கு அஞ்சி தோற்று காட்டுக்குள் சென்று அடைந்து விட்டது! அண்ணம், நின் மென்மையான நடைக்கு அஞ்சி ஒளிந்து கொண்டது! நின் மொழிக்கு தோற்றுப் போன பசுமை நிறமுடைய சிறிய கிளி இரக்கத்துக்குரியது! குழலிசையோடு, யாழிசையோடு அமிழ்தமும் குழைத்தாற் போன்ற நின் மழலை பேச்சிற்கு அவை வருந்தி சோர்ந்தன. மதி போன்ற நின் முகத்தில் முத்து முத்தாய் வியர்வை அரும்பிடவும், சிறிதான நின் இடை துவண்டு வருந்திடவும், மென்மேலும் உன் மீது அணிகலன்கள் பூட்டுகின்றனரே, இவர்களுக்கு என்னதான் நேர்ந்தது?

**போற்றி புகழ்தல்**

(கண்ணகியின் புகழை, கோவலன் போற்றி புகழும் காட்சி)

மாசறு பொன்னே வலம்புரி முத்தே

காசறு விரையே கரும்பே தேனே

அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே

பெருங்குடி வாணிகன் பெருமட மகளே

மலையிடைப் பிறவா மணியே யென்கோ

அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ

யாழிடைப் பிறவா இசையே யென்கோ

தாழிருங் கூந்தல் தையால் நின்னையென்று...

பொருள் விளக்கம்

குற்றமற்ற பொன்னே – தங்கத்தைப் போல் மாசற்றவள் (Noble Metal); வலம்புரிச் சங்கிலே பிறந்த முத்து போன்றவளே! குற்றமற்ற மணப்பொருள் தரும் தெய்வ மணமே! இனிமையான கரும்பை போன்றவளே! தேனினும் இனிமையுடையவளே! பெறுவதற்கு அருமையான பாவையை! இன்னுயிர் காக்கும் மருந்தே! பெருங்குடி வணிகனின் பெருமை வாய்ந்த மகளே! நீண்டு தாழ்ந்த கருங்கூந்தல் உடைய பெண்ணே!

மேலும்

தங்கள் வாழ்க்கை வரலாறு ஒரு காப்பியமாகும், தாங்கள் இருவரும் காப்பியத் தலைவன் மற்றும் தலைவி ஆவார்கள் என்றும் அவர்களக்கு தெரிய வாய்ப்பில்லை.

தங்களது வாழ்க்கை வரலாற்றை ராஜதுறவி (இளங்கோவடிகள்) இலக்கியமாக வடிப்பார்; அதை பின்னாளில் தமிழ்நாட்டின் முதல்வர் ஒருவர் (டாக்டர் கலைஞர்) திரைக்காவியமாக வடிப்பார் என்றும் அவர்கள் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். தங்களது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கலைக்கூடம் ஒன்று நிறுவி பூம்புகாருக்கு மேலும் பெருமை சேர்ப்பார் என்றும் அவர்கள் நினத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

தனது சிலை சென்னை கடற்கரையிலும், பாடபுத்தகங்களின் அட்டையில் இடம்பெறும் என்றும் அவள் நினைத்திருக்கமாட்டாள்.

கண்ணகி பின்னாளில் இந்த பரத கண்டத்தில் பெண்களின் மாண்புகளை விளக்க உதாரணம் காட்டப்படுவாள் என்றும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

இவள் பாரதம் போற்றும் பெண்ணாக வரப் போகிறாள் என்றும் கோவலன் நினத்துப் பார்த்திருக்க மாட்டான்.

வீர சிவாஜியின் தாயுடனும், இந்தூர் மகாராணி, கக்கத்திய இளவரசி ருத்தரமாதேவி, மற்றும் சுதந்திரப் போராட்ட *வீராங்கனை ஜான்சி ராணி லட்சுமி பாய்* மற்றும் தியாகி ராணி கிடலினுடனும் இவள் பெயரும் சேர்த்து சமூக சேவை மற்றும் வீரதீர செயல்புரிந்தோர்க்கு வருடந்தோரும் பரிசுகள் வழங்கப்படும் என்று கோவலனுக்கோ அல்லது கண்ணகிக்கோ அன்று தெரிய வாய்ப்பில்லை.

**Stree Shakti Puraskar awards in six titles**

Kannagi Award
Mata Jijabai Award
Kakatity Queen Rudrama Devi Award
Devi Ahilya Bai Holkar Award
Rani Lakshmi Bai Award
Rani Gaidinliu Zeliang Award

கண்ணகி கோவலனின் புகழுறையில் மயங்கியிருந்தாலும், பின்னாளில் அவளது வாழ்க்கை சோக நாடகமாகப் போகிறது என்று அவளுக்கு தெரிய வாய்ப்பில்லை**....**

Reference:


1. ww.diamondtamil.com/education/aimperum_kappiyangal/silappatikaram/silappatikaram2_3.html#.XNxdMaThVPZ


**.............**

www.samugasinthanai.in